
# தி.மு.கழகத்தின் இதயத் துடிப்பு தான் 'முரசொலி'!

## முரசொலி மாறன் கடிதம்!


**அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்கள் 1980 - ஆம் ஆண்டு 'முரசொலி' ஏடு தனது வெள்ளி விழா ஆண்டில் மதுரைப் பதிப்பினை தொடங்கியபோது 'மதுரையில் ஒலிக்குது முரசொலி' என்று தலைப்பிட்டு , அதற்கு வாழ்த்துத் தெரிவித்து தன் கைப்பட எழுதிய கடிதம் .**


**அதனை இங்கே வெளியிட்டுள்ளோம். அது வருமாறு:-**



மதுரையில் ஒலிக்குது முரசொலி!







**இவ்வாறு முரசொலி மாறன் அவர்கள் தன் கைப்பட எழுதியுள்ளார்.**

**- இந்தக் கடிதத்தைப் பாதுகாத்து அனுப்பிய பத்திரிகையாளர் தி.கூடலரசன் அவர்களுக்கு நன்றி. (ஆ.ர்)**

---

### நீட் தேர்வுக்கு எதிராக

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் உண்ணாவிரதம்!

## மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் நிலைய அலுவலகம் முன்பு நடைபெறுகின்றது!

கடலூர், ஆக. 18-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத அறப்போர் மஞ்சகுப்பத்தில் நடைபெறுகிறது.

இது பற்றி விவரம் வருமாறு:

நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வரும் 20.08.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை வரை கடலூர் மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் எதிரில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும்.

அது சமயம் இந்த உண்ணாவிரத்தில் இளைஞர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகதோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

---

### திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன!

சென்னை, ஆக. 18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களைர் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (17.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.10 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நாகப்பட்டினம் வேளாங்கண்ணி கிழக்கு கடற்கரை சாலையில் பாப்பாகோயில் கிராமத்தில் அமைந்துள்ள 1.39 ஏக்கர் நிலத்தில் இரண்டு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் அவர்கள் தலைமையில் உதவி ஆணையர் திருமதி ப.ராணி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி பி.எம். அமுதா, திருக்கோயில் செயல் அலுவலர் இரா. தினேஷ் சுந்தரராஜன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் இன்று வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.